
# வெற்றிமணி

மலர் 7

இதழ் 4

சிறுவர் மாத இதழ்



அப்பலோ 11இன் வீரர்கள்

15-8-69

சதம் 30

நங்கையர் விரும்பும் நவநாகரீக

★ நகைகளுக்கும் ★ வைரங்களுக்கும்

புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே. என். எம். மீரான் சாஹிப்

"தங்கப்பவுண் நகை மாளிகை"

கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*

# K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial:* 585 **JAFFNA**



## வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு- வயிற்று வலிக்குச் சிறந்தது. (பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00

(தேவைக்கு எழுதவும்)

## வீரகேசரி மாத்திரை

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்

100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13, 24—ரூ. 7. (மெழுகு ரூ. 4)

(பார்சல் சார்சு தனி)

**பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P.**

அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-

(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு. பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவிரோடு, பம்பாய்-17



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற்செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா. | 4-00 |
| இந்தியா | ரூபா. | 4-00 |
| மலாயா | $ | 4-00 |

★

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா. | 50-00 |
| உள் அட்டை | ரூபா. | 35-00 |
| முதற் பக்கம் | ரூபா. | 30-00 |
| உட் பக்கம் | ரூபா. | 20-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்
15 வீதக் கழிவுண்டு

விபரங்களுக்கு எழுதுக.

வெற்றிமணி
முள்ளியவளை — இலங்கை

## பொருளடக்கம்


தலையங்கம் ... ... ... ... 3
சமரகவிப் புலவரின் சந்திப்பு ... 4
ஆலும் தெங்கும் ... ... ... 6
தன்னயம் ... ... ... ... 8
கணக்கியலுக்கோர் அறிமுகம் 9
ஆபிரிக்காவின் காலநிலையும்
இயற்கைத் தாவரமும் 13
பேனு நண்பர் சங்கம் ... .. 14
உண்மை உயர்வு தரும் ... 16
விஞ்ஞான வண்ணங்கள் ... 18
பெயர் மாறிய சிலை ... ... 19
பற்கள் ... ... ... ... ... 21
மாணவர்களும் விளையாட்டுக்களும் 22
ஏழையின் கனவு ... ... ... 25
இஸ்லாய வாழ்க்கைக்கு
வழிகோலும் அல் குர்ஆன் 27
கவிதை அரங்கம் ... ... ... 29
வெற்றிமணி மாணவர் மன்ற
விண்ணப் பத்திரம் 32

— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

மலர் 7. | வெள்ளிக்கிழமை 15-8-69 | இதழ் 4

# அமெரிக்கரின் அரிய சாதனை!

மனித வரலாற்றிலே காலத்துக்குக் காலம் புதிய கண்டு பிடிப்புகளும் வியத்தகு சாதனைகளும் நடைபெற்றே வந்திருக்கின்றன. அந்த வரிசையில் அமெரிக்கர் சந்திரனிற் காலடி வைத்துச் சந்திர மண் கொண்டு வெற்றியுடன் திரும்பியமை மிகவும் பிற்பட்டதும் புதியவொரு காலத்தை ஏற்படுத்தியதுமாகும். கால வளர்ச்சி கொண்டு பார்க்கின்றபோது இதனை மனிதன் எப்பொழுதோ செய்திருக்க வேண்டும் என்று எண்ணத் தூண்டுகின்றது. உலகப் பிரச்சினைகள் இம் முயற்சியில் மனிதனைப் பின்னுக்கு இழுத்துவிட்டன.

ஆயினும் சாதனை சாதனையே தான். கொண்ட திட்டத்தில் முதல் வெற்றியீட்டிய அமெரிக்கர்களின் வியத்தகு வரலாற்றுச் சாதனை குறித்து உலகம் முழுவதுமே உன்னத பெருமைகொண்டு வியந்து பாராட்டி உவந்து கொண்டாடியதைக் கண்டோம். நீல் ஆம்ஸ்ரோங், மைக்கேல் கொலின்ஸ், எட்வின் ஆல்ட்றின் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகளும், பெற்ற பயிற்சியைத் தக்கவாறு செயற்படுத்தி வெற்றியுடன் திரும்பிய வீரர்களின் தீரச் செயலும் உண்மையிலேயே உன்னதமானவை. இதனைக் கண்டு களிக்கும் வகையில் எமது பிறப்பு அமைந்துவிட்டமை நாம் செய்த பேறேயாகும். ஆர்வமும் இடையருப் பரிசோதனைகளும் எல்லாவற்றிலும் மேலாகப் பொருள் வளமும் இம் முயற்சியை முட்டின்றி முடிக்க அமெரிக்காவுக்குத் துணை புரிந்தன. சந்திரனுக்குச் சென்று பாதுகாப்பாகத் திரும்பக்கூடிய நம்பிக்கையான ஒரு விண்வெளிக் கப்பலை அமெரிக்கா உருவாக்கிவிட்டது. ஆயினும் ஒவ்வொரு முறையும் போய்வருவதற்கு ஒவ்வொரு கப்பலை உருவாக்கும் நிலையிலிருந்து ஒரு கப்பலையே நான்கு ஐந்து பயணங்களுக்குப் பயன்படுத்தக்கூடியநிலைக்கு முன்னேற வேண்டும். அப்பொழுதுதான் இத் திட்டம் முழு வெற்றியை அளித்துவிட்டதாகக் கருதலாம்.

மதிவாணர்கள் (Lunarnauts) தாங்கள் கண்ட மதியைப் பற்றியும் தமது அரிய அனுபவம் பற்றியும் இனிமேல்தான் கூறவிருக்கின்றார்கள். அதனைக் கேட்க உலகம் ஆவலோடிருக்கின்றது.

விண்வெளி யாராய்ச்சியினுல் ஏற்கனவே பயன்பெறத் தொடங்கிவிட்டோம். மேலும் பல விந்தைமிகு பயன்கள் விளைத்து மனிதனின் வாழ்க்கை வசதிகளை முற்றாக மாற்றப்போகும் புதிய யுகத்தை வாழ்த்தி வரவேற்போமாக!

# சரமகவிப் புலவரின் சந்திப்பு

இரசிகமணி கனக செந்திநாதன்

ஈழத்தில் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் இறந்தவர்களுக்குச் சரமகவி பாடும் வழக்கம் இருக்கிறது. இறந்தவரது குலப்பெருமை, குடிப்பெருமை உத்தியோகம், மக்கள் மருமக்கள் பிரபாவம் முதலியன எல்லாம்வர புளுகு புளுகென்று புளுகி பாவம் - பல செய்து பாயில் கிடந்து பல காலம் வருந்தியவரைக்கூட-பரமனடி யெய்தினனரே என்று முடிப்பதுதான் சமரகவி மரபு. அப்படிச் சமரகவி பாடக் கூடிய ஒரு சிலர் ஊர்கள்தோறும் இருந்தனர். பத்துப் பதினைந்து ரூபா பெற்றுக்கொண்டு பாடிப் பிழைக்கும் இந்தத் திருக்கூட்டத்தார் தம்மையும் புலவர்கள் என்று சொல்லிக்கொண்டனர். நதியும் மலையும் இல்லாத இந்த யாழ்ப்பாணத்தை வருணிக்கும்போது கூட அவர்கள் ''தேனருவித் திரை யெழும்பி வானில் வழி ஒழுகும்'' எனத் திரிகூடராசப்ப கவிராயர் குற்றாலக் குறவஞ்சியில் கூறியதுபோல வர்ணித்தார்கள். இந்த ஆதீத வர்ணனைப் புலவர்களை ''சொல்லைத் தொடைபடக் கட்டி யாப்பென்பதால், சோகத்தை யதற்குட் பெய்து கல்லைப் பிசைந்து கறி ஆக்குகிற சரமகவிராயர்களைக் கண்டு இக்காலக் கவிஞர் ஒருவர் கேட்கிறார்; சற்று நையாண்டியாகவே கேட்கிறார். ஐயா, சரமகவிராயரே 'சீர்பூத்த' என்று தொடங்கி எத்தனை விடயங்களைப் பூக்க வைக்கிறீர். இவற்றையெல்லாம் பூக்க வைக்க என்ன மகா தீர்த்தம் - மந்திரத் தண்ணீர் வைத்திருக்கிறீர். எனக்கும் சொல்லும். சரியான ஆளையா நீர்'' என்று கேலி செய்கிறார்.

''சீர்பூத்த உம்முடைய செய்யுளில் ஐயகோ!
சிவம் பூக்கும், அவம் பூக்கும், உம்
ஊர்பூக்கும், உளம்பூக்கும், ஒலிபூக்கும் கலிபூக்கும்
உள்ளபொருள் எல்லாம் பூக்கும்
பேருக்க வடிவான கவிஞரே இவையெலாம்
பிழையின்றிப் பூக்க வென்று
நீரூற்றும் மந்திரத் தீர்த்த மெங்கே பெற்றீர்
நினைத்துச் சொல்லும் மறந்தால்!''

''தேனருவித்திரை யெழும்பி வானில் வைத்திடுகிறீர்
திரிகூடராசப்பன்போல்
வானளவும் மலையென மணற்குவியலைத்தானு
வருணித்துப் பாடுகின்றீர்.
மேனிலை இருந்திழியும் ஆறெனநீர் கூறியது
மிளகாய்க் கன்றுக்கிறைக்கப்
போன வரியம் நாங்கள் போட்ட வாய்க்காலையா
போங்காணும் மாவீரர் நீர்''

வானளவும் மலையென மணற்குவியலையும், வற்றாத ஆறென்ன மிளகாய்க் கன்றுக் கிறைக்கப் போட்ட வாய்க்காலையுமா பாடுகிறீர் என்று கேட்கும் நவயுகக் கவிஞரின் கேள்வி-கேலி - நமக்குச் சிரிப்பை உண்டாக்குகிறது. இப்படி மோசமாகத் தாக்குகிறாரே என்று எண்ணவும் தோன்றுகிறது.

ஆனால் அப்படி அதீத கற்பனையில் பாடுகின்ற சரமகவிப் புலவர்கள் இப்போது இல்லை. ஆனால் புதிய கவிஞர்களின் போக்கை, கவிதைகளை, மரபுநெறி தவறியது யாப்பு அணி இல்லாதது என்று கண்டனக் குரலெழுப்பும் பழமைப் பண்டிதர்கள் இருக்கிறார்கள். புதுமைக்கும் பழமைக்கும் நடக்கும் போராட்டத்தின் ஒரு திவலையாகத்தான் இதைக்கொள்ள வேண்டும். இடைக்கால பிற்காலக் கவிஞர்கள் அதீத வர்ணனைக்காரர்கள் என்பதைக் காட்ட சரமகவிப் புலவரை ஒரு கருவியாகக் கொண்டார் கவிஞர். அவ்வளவுதான்.

ஆசிரியர் எப்படித்தான் கேலிபண்ணினாலும் இரு வகைக் கவிஞர்களும் தேவைதான் என்பதுபோல ''எம் போற், கொழுந்துவிட்டெரிகின்ற கவிதையொளி கண்டவர்கள் கோடி பல் கோடிவேண்டும், பழம் தனிச் செந்தமிழ் பல்வளம் பெற்றிடப் பல காலம் வாழ்க நீரும்'' என முடிக்கிறார். நல்லமுடிவு என்பது என் எண்ணம்.

சரமகவிராயர் என்ற இந்தக்கவிதை ''நெடும்பகல்'' என்ற கவிதை நூலில் உள்ளது. ஈழத்தின் புதிய கவிஞர் பரம்பரைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கவிஞர் முருகையனின் நல்ல படைப்பு நெடும்பகல். அமுத நிலைய வெளியீடாக 1967ல் வெளிவந்திருக்கும் இந்த நூலை கவிதைகளில் ஈடுபாடுடையோர் அவசியம் படித்துப் பார்த்தல் வேண்டும்.

# ஆலும் தெங்கும்

இ. என். ராசா

நீண்ட பயணத்தை மேற்கொண்ட ஒருவன் பசியினுலும் தாகத்தினுலும் களைப்படைந்து ஒரு தென்னந்தோட்டத்திற் புகுந்து அங்கு பொறுப்பாயிருந்தவரிடம் கேட்டு இளநீர் பருகித் தன் தாகத்தையும் பசியையும் தணித்துக் கொள்கிறுன். வேகும் வெயில் அவனைக் களைப்படையச் செய்கிறது. ஓர் ஆலமரத்தின் கீழ் நிழலுக்காக நிற்கிறுன். இளநீர் ஞாபகம் வருகிறது அவனுக்கு. தன் உடற் களைப்பைத் தணித்த தென்னையை அவன் மனம் எண்ணிஎண்ணி வாழ்த்துகின்றது.

''இந்தப் பெரிய ஆலமரமுந்தான் இருக்கிறதே இதனுல் என்ன லாபம். பசியையும் தாகத்தையும் தீர்க்க முடிகிறதா இதனுல்'' என்று அலுத்துக்கொண்டே மீண்டும் தன் பயணத்தைத் தொடர்கிறுன்.

தென்னையின் ஞாபகந்தான் அவனைச் சுற்றிச்சுற்றி வட்டமிடுகிறது. ஒரு தேங்காயி லிருந்து உற்பத்தியான தென்னை இத்தனை உயரமாக வளர்ந்து தலையாலே தான் தரும் பலனை எண்ணி வியந்து பாராட்டுகிறுன்.

ஆனுல், கேட்பாரற்று - அனுதையாக - வீதி ஓரத்தில் நின்று தன் உடம்புக்கு நிழல் கொடுத்த ஆலமரத்தைப்பற்றி அவன் கொஞ்சமேனும் சிந்தித்தானில்லை. இதுதான் இன்றைய உலகம்.

உலகச் சூழலில் இலக்கியம், அறிவு, அரசியல், பத்திரிகை போன்றவற்றில் எதை எடுத்துக்கொண்டாலும் இந்த மறைமுகமான வேறுபாடு இருந்துவருவதை நாம் அறியலாம்.

பொறுப்புள்ள ஒரு கட்டுப்பாட்டிற்குள் அமைந்து உருவாக்கப்படும் தென்னைக்கு மதிப்பளிக்கும் அளவுக்கு நமக்குத் தெரியாமல் உதவி வரும் ஆலமரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ருேமில்லை. என்னே அறிவீனம்!

தென்னை ஒருவனின் முயற்சியில் உண்டாகிப் பலன் தருவது. தான் பலன் பெற்றே பிறர்க்குப் பயன் அளிப்பது. ஆனுல் சிறிய வித்திலிருந்து உற்பத்தியாகித் தான்

தோன்றியான ஆலமரம் நிழல் கொடுத்துதவும் பெருமை மேம்பாடுடையதல்லவா?

இலக்கியம், அறிவு, அரசியல், பத்திரிகை ஆகியவற்றில் மதம், இனம், மொழி என்பவைகளை ஈடுபடுத்தக் கூடாது. அப்படி ஈடுபடுத்திஞல் ஆலமரம்போற் பொதுப் படையான் நிழல் கொடுக்கும் முழு மனிதனுக இருக்கமுடியாது. ஆலமரம்போல் பொதுநல விரும்பிகளாக இலக்கிய கர்த்தாக்கள், அறிவுச் சுடர்மணிகள், அரசியல் வாதிகள், பத்திரிகைகள் நமக்குத் தெரியாமல் எத்தனையோ இருக்கத்தான் செய்கின்ருர்கள்.

தன் புகழை விரும்பாமல் தனக்கொரு நன்மையும் இல்லாமல் இலக்கியத்துறைக்குப் பணி புரிந்து வருவோர்களில் ஒரு பெரியவரை இங்கு உதாரணத்திற்கு இழுத்துக் கொள்ளலாம்:

ஒல்லியான உயர்ந்த மெல்லிய உருவ அமைப்புக் கொண்ட - வித்துச்சிறியதாயினும் விசாலமான கிளைவிட்ட - அறிவு கொண்ட அவரை அடிக்கடி பத்திரிகைகளிலும் பேச்சு மேடைகளிலும் கண்டுவருகின்றோம். அவர் தன்னைப்பற்றி எழுதவில்லை; தன்னைப்பற்றிப் பேசவில்லை.

எளிமையான தோற்றமும் குழந்தைப் பிள்ளையின் குடுகுடுத்த சிரிப்பும்கொண்ட அவர் பார்வைக்குக் கோமாளியாகத் தோன்றிஞலும் குறைந்த உருவத்திலே சிறந்த அறிவாளி அவர். அவர் அறிவு கொள்கை யாவும் ஆலமரம்பொல் விசாலமானது. நிழல் கொடுக்கக்கூடியது.

ஒருவரைப்பற்றியே எண்ணிப் போற்றிப் புகழாமல் இன, மத, மொழி இவைகளைப் பார்க்காது எல்லா அறிஞர்களையும், எல்லாக் கலைஞர்களையும், எல்லாக் கவிஞர்களையும் பற்றிக் கனவுகண்டு இலக்கியப் பணி புரிந்துவரும் தொண்டரான இவர் பேச்சிலும், எழுத்திலும் தெளிவையும், அமைதியையுங் காணலாம்.

பழகாமல் தூரத்தே நின்று பார்ப்பவர்களையும் தன் வசம் இழுத்துக்கொள்ளும் சக்திகொண்ட அந்தப் பெரியவரைத் தெரியாதார் இலர். இந்த நடமாடும் ஆலவிருட்சமான இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களை நல்லதொரு தொண்டரைப் பல்லாண்டு காலம் எம்மோடு வாழ்ந்துபணிபுரிய வல்லான் இறையவனை வணங்குவோமாக!

# தன்னயம்

× மு. க. சுப்பிரமணியம் ×

பலரிலும் ராதா-மணி-மாலா ஆகிய மூவரும் முதலில் தெரிவுசெய்யப்பட்டனர். ராதா-ஒரு செல்வந்தரின் மகள். மணி-ஒரு ஆசிரியரின் மகள். மாலா-மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்தவள். ராதா சிறுவயதாக இருக்கும்போதே தன் தங்கையைத் தாய் தூக்கினுல் அழுவாள்; தங்கையை மடிமீது வைத்துத் தாலாட்டினுல் தன்னையும் தாலாட்டும்படி கரைச்சல் கொடுப்பாள்; தங்கையைவிட்டுத் தன்னுடன் கதைக்கும்படி கூறுவாள்.

கல்வி நூற்றுண்டு விழா பேச்சுப் போட்டிக்கு மாணவர்களைத் தெரிந்து பங்குபற்றச்செய்யவேண்டும் என ஒவ்வொரு பாடசாலைக்கும் அறிவிக்கப்பட்டது. இதன்படி ஒரு பாடசாலையில் இரு மாணவர்களைத் தெரிந்து வட்டாரப்போட்டியில் பங்குபற்றச் செய்வதற்காகத் தெரிவு நடைபெற்றது.

ஆசிரியர் மூவரில் இருவரைத்தான் வட்டாரப் போட்டிக்கு அனுப்புவது என்றுர். ராதா திடீரென விம்மினுள்; கண் கலங்கினுள்; ஆசிரியர் ''என்ன ராதா? ஏன் அழுகின்றுய்?'' என்று கேட்டார். ''யான் போட்டியிற் பங்குபற்ற வேண்டும் என்னைத் தெரிவுசெய்யுங்கள்'' என்றுள். ஆசிரியர் என்ன செய்வது எனத்தெரியாது யோசித்தார். உண்மையில் மணியும்-மாலாவுமே தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள். ராதா - தன்னயம் உடையவள். தான் பங்குபற்றிப் பரிசு பெறவேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு! ஆனுல், மணி தன்னயம் அற்றவள்; உடனே ஆசிரியரிடம் ''என்னை விலக்கிவிடுங்கள்; ராதாவையும் - மாலாவையும் பங்குபற்ற அனுப்புங்கள்'' என்றுள்.

ராதா வீட்டுக்குச் சென்றுள். தாயாரிடம் தான் பேச்சுப்போட்டியிற் பங்குபற்றத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகக் கூறினுள். ஆனுல், அவளின் தம்பியோ ''அம்மா! அக்கா தன்னைத் தெரிவுசெய்யும்படி அழுதா. அதனுல், மணி அக்கா 'தன்னைத் தெரிவு செய்ய வேண்டாம் - அக்காவையும், மாலாவையும் அனுப்புங்கள்' என்று கூறினு'' என உண்மையான விஷயத்தைக் கூறினுன். ராதாவின் அம்மா ''ராதா நீ தன்னயம் உடையவள். இக்குணம் கெட்டது. முதலில் பிறரைப்பற்றிச் சிந்தி; இறுதியிற்றுன் உன்னைப்பற்றிச் சிந்திக்கவேண்டும்'' என்று புத்தி கூறினுள்.

# கணக்கியலுக்கோர் அறிமுகம் (15)

வை. சி. சிவஞானம்

**பேரேட்டில் வியாபார நடவடிக்கைகளைப் பதிதல்:**

ஒரு வியாபார நிலையத்தின் முக்கிய ஏடு பேரேடு. (LEDGER) வியாபார சம்பந்தமான எல்லாக் கணக்கு விபரங்களையும் இவ்வேட்டில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். இவ்வேட்டிலுள்ள கணக்குகளை மெய்க்கணக்கு, பெயருள் கணக்கு, பெயரளவுக் கணக்கு என மூவகையாகப் பிரிக்கலாம். காசேடும் சில்லறைக் காசேடும் பேரேட்டின் ஒரு பகுதியாகவும், முதலேடுகளாகவும் கடமையாற்றுகின்றன என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளல் வேண்டும். நடவடிக்கைகள் அதிகரித்த வியாபார நிலையங்கள் பேரேட்டைப் பிரித்து பல ஏடுகளாக வைத்திருக்கின்றன. அவையாவன:

1. கொள்வனவுப் பேரேடு (கடன் கொடுத்தோர் பேரேடு)
2. விற்பனைப் பேரேடு (கடன்பட்டோர் பேரேடு)
3. பொதுப் பேரேடு
4. சொந்தப் பேரேடு

வியாபார நடவடிக்கைகள் குறைந்த நிலையங்கள் எல்லா நடவடிக்கைகளையும் ஒரே பேரேட்டில் வைத்திருக்கின்றன.

பேரேட்டின் ஒரு பக்க மாதிரி:

| பற்று | | | | | | வரவு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீ | உ | விபரம் | பக்க. | ரூ. | ச. | மீ | உ | விபரம் | பக்க. | ரூ. | ச. |
| | | | | | | | | | | | |

**1. ஐந்தொகையில் உள்ள மீதிகளைப் பேரேட்டில் பதிதல்:**

ஐந்தொகையின் சொத்துக்கள் பக்கத்திலுள்ள காசு, வங்கி மீதி சில்லறைக் காசேட்டு மீதிகளைத் தவிர்ந்த ஏனைய கணக்கு மீதிகள் ஒவ்வொன்றுக்கும் பேரேட்டில் அக் கணக்குகளின் பெயரில் கணக்குகளை ஆரம்பித்து அக் கணக்கின் மீதிகளை "மீதி" என்ற விபரத்துடன் பற்றுப் பாகத்தில் பதிதல் வேண்டும். ஐந்தொகையில் கடன் பாகத்திலுள்ள "வங்கிக் கடன்" தவிர்ந்த ஏனைய கணக்கு மீதிகளுக்கு பேரேட்டில் கணக்குகளை ஆரம்பித்து அக் கணக்குகளின் கீழ் "மீதி" என்ற விபரத்துடன் அவ்வக் கணக்கின் வரவுப் பாகத்தில் அத் தொகைகளைப் பதிய வேண்டும். காசேட்டிலுள்ள வங்கி மீதி, காசு மீதி, வங்கிக் கடன் சில்லறைக் காசேட்டு மீதி என்பன காசேடு சில்லறைக் காசேடு ஆகியவை பேரேட்டின் ஒரு பகுதியாக இருப்பதால் பதியத் தேவையில்லை. ஐந்தொகை மீதிகளுக்கு ஒரு பதிவு செய்வதன் காரணம் மூலதனப் பதிவால் அது இரட்டைப் பதிவின் தத்துவத்தைப் பூரணப்படுத்துகிறது.

2. காசேட்டின் காசு, வங்கி நிரல்களின் எதிர்ப்பதிவுகளைப் பேரேட்டில் பதிதல்:

காசு வங்கி மீதிகள் மூலதனப் பதிவினுல் இரட்டைப் பதிவு பெற்று விட்டமையால் அவற்றுக்குப் பேரேட்டில் எதிர்ப்பதிவுகள் தேவையில்லை. காசு நிரலிலும், வங்கி நிரலிலும் எதிர்ப்பதிவு செய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கும் பேரேட்டுக்கு மாற்றப்படவோ எதிர்ப்பதிவுகள் செய்யவோ தேவையில்லை.

காசேட்டின் பற்றுப்பாகத்திலுள்ள காசு, வங்கி நிரல்களிலுள்ள ஏனைய நடவடிக்கைகளுக்குப் பேரேட்டில் அவ்வக் கணக்குகளின் வரவுப்பாகத்தில் பதிய வேண்டும். காசேட்டின் வரவுப் பாகத்தின் காசு, வங்கி நிரல்களிலுள்ள ஏனைய நடவடிக்கைகளுக்குப் பேரேட்டில் அவ்வக்கணக்கில் பற்றுப்பாகத்தில் பதிதல் வேண்டும். காசேட்டின் நடவடிக்கைகளைப் பேரேட்டுக்கு மாற்றும்போது பேரேட்டில் அக்கணக்குகள் இருந்தால் அக்கணக்கின் கீழ் உரிய பக்கத்தில் உரிய தொகையைப் பதிதல் வேண்டும்.

3. காசேட்டின் கழிவு நிரல் தொகைகளைப் பேரேட்டில் பதிதல்:

காசேட்டின் பற்றுப்பாகக் கழிவு நிரலின் கூட்டுத் தொகையைப் பேரேட்டில் கொடுத்த கழிவுக் கணக்கின் பற்றுப் பாகத்தில் "காசேட்டால்" என்ற விபரத்துடன் பதிதல் வேண்டும். இத் தொகையின் எதிர்ப்பதிவுகளை கடன்பட்டோரில் கழிவு கொடுத்தவர்களின் கணக்கின் வரவுப் பாகத்தில் "கழிவால்" என்ற விபரத்துடன் பதிதல் வேண்டும். காசேட்டின் வரவுப்பாகக் கழிவு நிரலின் கூட்டுத்தொகையைப் பேரேட்டில் பெற்ற கழிவுக் கணக்கின் வரவுப் பாகத்தில் "காசேட்டால்" என்ற விபரத்துடன் பதிதல் வேண்டும். இத்தொகையின் எதிர்ப் பதிவுகளை கடன்கொடுத்தோரில் கழிவு தந்தவர்களின் கணக்கின் பற்றுப் பாகத்தில் "கழிவால்" என்ற விபரத்துடன் பதிதல் வேண்டும். காசேட்டின் கழிவு நிரல்களின் தொகைகள் பேரேட்டில் இரட்டைப் பதிவுக்குரிய இருபதிவுகளும் இடம் பெறுதல் வேண்டும்.

4. சில்லறைக் காசேட்டின் வரவு நிரல்கள் (பாகுபாட்டு நிரல்களின்) எதிர்ப் பதிவுகள்:

காசேடு பேரேட்டின் ஒரு பகுதியாகவும், சில்லறைக் காசேடு காசேட்டின் ஒரு பகுதியாகவும் பயன்படுகின்றன. சில்லறைக் காசேட்டின் பற்றுப் பதிவுகள் யாவும், காசேட்டின் காசு, அல்லது வங்கி நிரல்களில் வரவுப் பதிவுகளாகப் பதியப்பட்டிருக்கும். இருபதிவுகளும் செய்யப்படுகின்றமையால் இந்நடவடிக்கைகள் பேரேட்டிற்கு மாற்றப்படத் தேவையில்லை. சில்லறைக் காசேட்டின் வரவுப்பாகத்திலுள்ள பாகுபாட்டு நிரல்களின் கூட்டுத்தொகையை பேரேட்டில் ஒவ்வொரு பாகுபாட்டு நிரலின் பேரில் உள்ள கணக்குகளின் கீழ்ப் பற்றுப்பாகத்தில் பதிதல் வேண்டும். அந் நிரல்களின் பேரில் பேரேட்டில் கணக்குகளில்லாது விடின் பேரேட்டில் புதிதாகக் கணக்குகளை ஆரம்பித்துப் பதிதல் வேண்டும்.

5. கொள்வனவு நாளேட்டின் தொகைகளைப் பேரேட்டுக்கு மாற்றுதல்:

கொள்வனவு நாளேட்டின் கூட்டுத் தொகையைப் பேரேட்டிலுள்ள கொள்வனவுக் கணக்கின் பற்றுப் பாகத்தில் "நாளேட்டால்" என்ற விபரத்துடன் பதிதல் வேண்டும். இத் தொகைக்குரிய எதிர்ப்பதிவுகளை கடன்கொடுத்தோர் பெயருள் கணக்குகளில் கொள்வனவால்" என்ற விபரத்துடன் பதிதல் வேண்டும். கொள்வனவு நாளேட்டின் தொகைகள் பேரேட்டில் இரட்டைப்பதிவுக்குரிய இரு பதிவுகளும் இடம்பெறுதல் வேண்டும்.

6. விற்பனை நாளேட்டின் தொகைகளைப் பேரேட்டுக்கு மாற்றுதல்:

விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகையைப் பேரேட்டிலுள்ள விற்பனைக் கணக்கின் வரவுப் பாகத்தில் "நாளேட்டால்" என்ற விபரத்துடன் பதிதல் வேண்டும். இத் தொகைக்குரிய எதிர்ப்பதிவுகளை கடன்பட்டோர் பெயருள் கணக்கில் "விற்பனையால்" என்ற விபரத்துடன் பற்றுப் பாகத்தில் பதிதல் வேண்டும். விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகைகளும் பேரேட்டில் இரட்டைப் பதிவுக்குரிய இரு பதிவுகளும் இடம் பெறும்.

7. உட்டிரும்பிய சரக்கேட்டின் கூட்டுத்தொகையைப் பேரேட்டுக்கு மாற்றுதல்:

உட்டிரும்பிய சரக்கேட்டின் கூட்டுத் தொகையைப் பேரேட்டிலுள்ள உட்டிரும்பிய சரக்குக் கணக்கின் பற்றுப் பாகத்தில் "நாளேட்டால்" என்ற விபரத்துடன் பதிதல் வேண்டும். இதன் எதிர்ப்பதிவுகள் கடன்பட்டோர் பெயருள் கணக்கில் வர்வுப்பாகத்தில் "திரும்பிவந்த சரக்கு" என்ற விபரத்துடன் பதிதல் வேண்டும். உட்டிரும்பிய சரக்கேட்டின் தொகை பேரேட்டில் இரட்டைப் பதிவுக்குரிய இருபதிவுகளும் இடம் பெறும்.

8. வெளித்திரும்பிய சரக்கேட்டின் கூட்டுத்தொகையைப் பேரேட்டுக்கு மாற்றுதல்:

வெளித்திரும்பிய சரக்கேட்டின் கூட்டுத்தொகையைப் பேரேட்டிலுள்ள வெளித்திரும்பிய சரக்குக் கணக்கில் "நாளேட்டால்" என்ற விபரத்துடன் வரவுப் பாகத்தில் பதிதல் வேண்டும். எதிர்ப்பதிவுகளை கடன் கொடுத்தோர் பெயருள் கணக்கில் "திரும்பிச்சென்ற சரக்கு" என்ற விபரத்துடன் பற்றுப் பாகத்தில் பதிதல் வேண்டும். இவ்வேட்டின் கூட்டுத்தொகை பேரேட்டில் இரட்டைப் பதிவுக்குரிய இரு பதிவுகளும் இடம்பெறும்.

9. வருமதி உண்டியலேட்டின் தொகைகளைப் பேரேட்டுக்கு மாற்றுதல்:

வருமதி உண்டியலேட்டின் கூட்டுத்தொகையைப் பேரேட்டிலுள்ள வருமதி உண்டியல் கணக்கின் பற்றுப்பாகத்தில் "நாளேட்டால்" என்ற விபரத்துடன் பதிதல் வேண்டும். இத்தொகையின் எதிர்ப்பதிவான வரவுப் பதிவுகள் கடன் பட்டோர் பெயருட் கணக்கில் "உண்டியல்" என்ற விபரத்துடன் பதிதல் வேண்டும். வருமதி உண்டியலேட்டின் தொகைகள் பேரேட்டில் இரட்டைப் பதிவுக்குரிய இரு பதிவுகளும் பதியப்படும்.

10 சென்மதி உண்டியலேட்டின் தொகைகளைப் பேரேட்டுக்கு மாற்றுதல்:

சென்மதி உண்டியலேட்டின் கூட்டுத் தொகையைப் பேரேட்டிலுள்ள சென்மதி உண்டியல் கணக்கில் ''நாளேட்டால்'' என்ற விபரத்துடன் வரவுப்பாகத்தில் பதிதல் வேண்டும். இத்தொகையின் எதிர்ப்பதிவான வரவுப் பதிவுகள் கடன் பட்டோர் பெயருட் கணக்கில் பற்றுப் பாகத்தில் பதிதல் வேண்டும். சென்மதி உண்டியலேட்டின் தொகைகள் பேரேட்டில் இரட்டைப்பதிவுக்குரிய இருபதிவுகளும் பதியப்படும்

11. முறையான நாட்குறிப்பிலுள்ள தொகைகளைப் பேரேட்டுக்கு மாற்றுதல்

முறையான நாட் குறிப்பில் பதியவேண்டிய நடவடிக்கைகள் பற்று - வரவாகவே பிரித்துப் பதியப்படும். அவற்றைப் பேரேட்டில் உள்ள அவ்வக்கணக்குகளில் பதிய வேண்டும்.
உதாரணம்: மூலதன வட்டி 100/-

முறையான நாட் குறிப்பில்:

| | | |
|---|---|---|
| வட்டிக்குக் கணக்குப் பற்று | 100/- | |
| மூலதனக் கணக்கு வரவு | | 100/- |

எனப் பதியப்படும். பேரேட்டிலுள்ள வட்டிக்கணக்கில் ''மூலதனத்தால்'' என்ற விபரத்துடன் பற்றுப் பாகத்திலும், மூலதனக் கணக்கில் ''வட்டியால்'' என்ற விபரத்துடன் வரவுப் பாகத்திலும் பதிய வேண்டும்.

## பேரேட்டின் பதிவுகள்

ஒரு பதிவுக்குரியவை

1. ஐந்தொகையிலுள்ள கணக்கு மீதிகள்
2. காசேட்டின் காசு, வங்கி நிரல்களின் நடவடிக்கைகளின் எதிர்ப் பதிவுகள்.
3. சில்லறைக் காசேட்டின் வரவுப்பாகப் பாகுபாட்டு நிரல்களின் எதிர்ப்பதிவுகள்.

இரு பதிவுக்குரியவை

1. கொள்வனவு ஏடு
2. விற்பனை ஏடு
3. காசேட்டின் கழிவு நிரல்.
4. உட்டிரும்பிய சரக்கேடு
5. வெளித் திரும்பிய சரக்கேடு
6. வருமதி உண்டியலேடு
7. சென்மதி உண்டியலேடு
8. முறையான நாளேடு

(தொடரும்)

# ஆபிரிக்காவின் கால நிலையும் இயற்கைத் தாவரமும்.

வி. கந்தவனம் B. A.

மத்திய கோடு ஆபிரிக்காவின் மத்திய பகுதிக்கூடாகச் செல்கின்றது. இதற்கு வடக்கே கடகக் கோடும், தெற்கே மகரக்கோடும் ஆபிரிக்காவை வெட்டிச் செல்கின்றன. இவ்வாறு மத்தியகோடும் மற்றைய இரு பிரதான கோடுகளும் ஊடறுத்துச் செல்லும் ஒரேயொரு கண்டம் ஆபிரிக்காவாகும்.

கடகக் கோட்டுக்கும் மகரக் கோட்டுக்கும் இடைப்பட்ட பகுதி வெப்பவலயம் எனப்படும். இங்கு வெப்பம் அதிகமாகும். இவ்வலயத்திலுள்ள மத்திய கோட்டுப்பகுதிகள் பிறபகுதிகளிலும் பார்க்க அதிக மழையைப் பெறுகின்றன. வருடம் முழுவதும் பரவலான மழை இங்கு பெய்கின்றது. வெப்பமும் ஈரலிப்புங் கொண்ட இக்காலநிலை மத்திய கோட்டுக் கால நிலை எனப்படும். ஆபிரிக்காவின் மத்தியிலுள்ள கொங்கோ வடிநிலப் பகுதியில் இக்காலநிலை சிறப்பாகக் காணப்படுகின்றது.

இங்கு மழை வருடம் முழுவதும் பெய்வதனால் இயற்கைத் தாவரம் அடர்த்தியாக வளர்ந்துள்ளது. முதிரை, கருங்காலி, வேம்பு முதலிய வன்மரங்கள் நீண்டு வளர்ந்துள்ளன. இவற்றுக்கிடையிற் சிறு மரங்களும் பற்றைகளும் நெருக்கமாக வளர்ந்துள்ளன. இவற்றின் மேல் செடிகளும், கொடிகளும் பின்னிப் பிணைந்து படர்ந்துள்ளன. மனிதர்கள் எளிதில் உட்செல்ல முடியாத அளவுக்கு இம் மத்திய கோட்டுக் காடுகள் அடர்த்தியான இருட் காடுகளாகவுள்ளன. மழை வீழ்ச்சி காரணமாக இவை என்றும் பசுமையாகவே காட்சியளிக்கின்றன.

வெப்பலய ஆபிரிக்காவின் ஏனைய பகுதிகளில் மழை குறைவு. வெப்பப் பருவத்தில் மட்டும் மழை பெய்கின்றது. வெப்பநிலை கூடுதலாகவுள்ளது. இக்காலநிலை புல்நிலத்துக்குரியதாகையால் இப்பகுதிகளில் இயற்கைத் தாவரம் உயரமாக வளர்ந்த புல்லையும் இடையிடையே குடை வடிவான மரங்களையுங் கொண்டுள்ளது. இவ்வெப்பப் புல்நிலம் சவன்னா என்ற பெயரால் அழைக்கப்படும். கொங்கோ வடி நிலத்துக்கு வடக்கிலும் தெற்கிலும் சவன்னாப் புல் நிலங்கள் காணப்படுகின்றன. வெப்பங் குறைந்த தென் ஆபிரிக்காவில் சவன்னாவிலிருந்து வேறுபடும் புல் நிலம் ஒன்றுள்ளது. இது வெல்டு எனப்படும். இது கட்டைப் புற்களைக் கொண்டுள்ளது.

ஆபிரிக்காவில் மத்திய கோட்டிலிருந்து வடக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் மழைவீழ்ச்சி குறைந்துகொண்டு செல்கின்றது. சவன்னுவுக்கு அப்பால் மழை மிகவும் குறைந்து வெப்ப பாலைநிலைக் காலநிலை காணப்படுகின்றது. சவன்னுவுக்கு வடக்கில் சகாராப் பாலை நிலமும் தெற்கில் காலகாரிப் பாலை நிலமும் அமைந்துள்ளன. பாலை நிலங்களில் பாலைநிலச் சோலைகளைத் தவிர வேறு தாவரங்கள் எவற்றையும் காணமுடியாது.

சகாராவுக்கு வடக்கிலும் காலகாரிக்குத் தெற்கிலும் கேப்ரவுண் பகுதி மத்தியதரைக் காலநிலைப் பிரதேசங்கள் காணப்படுகின்றன.

இங்கு மாரியில் மழை கிடைக்கின்றது. ஆனல் கோடை காலம் வறட்சியானது. இங்குள்ள காடுகள் அடர்த்தியற்ற நிரந்தரக் காடுகளாகும். கோடைகால வறட்சியிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய நீண்ட வேரும் தடித்த இலைகளும், தொங்கும் வேரும் சிறிய இலைகளுமுடைய மரங்கள் இங்குள்ளன. இத்தகைய விசேட தன்மைகளால் ''நிரந்தரமான'' (எப்பொழுதும் பச்சைப் பசேலென்ற) காடுகளாக இவை காணப்படுகின்றன.

இவ்வாறு மத்திய கோட்டுக்கு வடக்கேயும் தெற்கேயும் ஒப்பான காலநிலைகளைக் கொண்டுள்ள ஒரே கண்டம் ஆபிரிக்காவாகும்.

## மூளைக்கு வேலை

15-7-69ல் வெளியிடப்பட்ட மூளைக்கு வேலை என்பதன் விடை

| | | | |
|---|---|---|---|
| 1 | கோழியின் விலை | ரூபா | 2-50 |
| 1 | ஆட்டின் விலை | ரூபா | 25-00 |
| 1 | மாட்டின் விலை | ரூபா | 100-00 |

மோகன் கொண்டு சென்ற தொகை இதன்படி ரூ. 250-00

| | | | |
|---|---|---|---|
| 1 | மாடு | ரூபா | 100-00 |
| 3 | ஆடு | ரூபா | 75-00 |
| 10 | கோழி | ரூபா | 25-00 |
| | பாக்கி | ரூபா | 50-00 |
| | | | 250-00 |

# பேனா நண்பர் சங்கம்

19. வேல்-அமுதலிங்கம் (அமுதன்)
'அறிவகம்'
284/1 பியகம ரோட்,
களனி.

தமிழ் - சிங்களம் - ஆங்கிலம் அறிந்த இவருக்கு வயது 30.

பேசும் - நடிக்கும் - இரசிக்கும் திறமைகளுடைய இவர் புத்தகம் சேர்த்தல் - வாசித்தல் - எழுதுதல் - அறிவு வளர்ச்சி அலுவல்களிற் பங்குபற்றல் போன்ற பொழுதுபோக்குகளைக் கொண்டவர்.

இதே தன்மையினரை மட்டுமே கடிதத் தொடர்பு கொள்ளத் தயவாக வேண்டுவதோடு, இரு பாலாரும் தொடர்புகொள்ள இடமளிக்கிறார்.

★★★

# மாணவர் மன்றம்

**அன்புள்ள மருமக்களே!**

மாணவர் மன்றத்தில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புகிறவர்களின் பெயர்கள், முகவரிகள் இப் பகுதியில் வெளியிடப்படும். நீங்கள் சேர்வதுடன் உங்களுக்கு அறிமுகமானவர்களையும் அங்கத்தவர்களாகச் சேர்க்கவும்.

—மணிமாமா

39. இ. சுசீலாதேவி, உசன் கந்தசாமி கோவில், மிருசுவில்.

★★★

## அறிவுப் போட்டி இல. 9

**பரிசு ரூபா 10-00**

ஷை போட்டியின் முடிவு திகதி

**8-9-69 திங்கட்கிழமை யாக**

மாற்றப்பட்டுள்ளது.

பங்குபற்ற விரும்பும் நேயர்கள்

**15-7-69 வெற்றிமணி இதழைப் பார்க்கவும்.**

— ஆசிரியர்




## உண்மை உயர்வு தரும்!

( ம. கணபதி, கைலண்ட்ஸ் கல்லூரி, அட்டன். )

சூரியன் மேற்கே போகத் தொடங்கிவிட்டான். வெயில் சுட்டெரித்துக்கொண்டிருக்கிறது. அந்த இரண்டு மணி நேரத்திலே, அச் சிறிய ஒற்றையடிப் பாதையிலே ஒரு பெரியவர் நடந்துகொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் இரு சிறுவர்கள் சென்றுகொண்டிருந்தனர். பெரியவர் அக் கிராமத்திற்கு அன்றுதான் வந்திருந்தார். எனவே அவருக்கு வழிகாட்ட அந்த இரு சிறுவர்களும் சென்றுகொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் பெயர் குமரன்; மற்றவன் பெயர் ஜெயம். குமரன் ஏழை; நல்லொழுக்கமுடையவன்; தன் தாய் தந்தையரை மதிப்பவன்; நன்றியுள்ளவன்; உதவி செய்பவன். ஆனால், ஜெயமோ ஏழையாயிருந்தாலும் இவற்றுக்கு நேரெதிராக, பொய் பேசிக் களவெடுப்பவன்.

இருவரும் ஒரே கல்லூரியிற் படிக்கின்றனர். அக் கல்லூரிக்கு அன்று ஒரு புதிய செய்தி வந்திருந்தது. இன்று யாரோ ஒரு பரிசோதகர் வருகிறார். அவர் மறைமுகமாகக் கவனிப்பாராம் யார் உதவி செய்வதில் முன் நிற்கின்றனர் என்று. எனவே எல்லோரையும் அலைந்து திரிந்து உதவி செய்யுமாறு கூறினர். எனவேதான் அவர்களிருவரும் சேர்ந்து அப் பெரியவருக்கு உதவிசெய்தனர்.

குமரன் தன் மனதில் 'எனக்குப் பரிசு கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி, நான் எல்லோர்க்கும் உதவி செய்வேன்' என்று நினைத்தான். ஆனால் ஜெயமோ பரிசோதகரின் ஆதரவு தனக்குக் கிடைக்கவேண்டுமென்று எண்ணினான்.

நேரம் கடந்துகொண்டிருந்தது. உலகன்னை இருளை அணைத்துக் கொண்டிருந்தாள். ஜெயமோ தனக்குக் காலில் வருத்தமென்று கூறிவிட்டுத் தன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். குமரன் அப் பெரியவரைக் கொண்டுசென்று அவருடைய குடிசையில் விட்டுவிட்டுத் திரும்பினான். அவன் வரும் வழியில் ஒரு மணிக்கூட்டைக் கண்டு, அது யாருடையதாயிருக்குமென எண்ணி, விலாசம் உள்ளதா எனப் பார்த்தான். விலாசம் காணாமையால் நகர காவலரிடம் கொண்டு சென்றான்.

சிறிது தூரம் சென்றபின் ஜெயம் வீழ்ந்துகிடந்தான். அவனுக்குக் காலில் நல்ல அடி பட்டிருந்தது. குமரன் ஜெயத்திடம் விபரத்தைக் கேட்க, ஜெயம் நேரமாகிவிடவே ஓடிவந்து தடுமாறி வீழ்ந்ததாகக் கூறினான். குமரன் தான் கண்டெடுத்த மணிக்கூட்டைக் காட்டி ''இது யாருடையதெனத் தெரியுமா'' எனக் கேட்கவும் ஜெயம் அதிர்ச்சியடைந்து ''இதை அப் பெரியவர் நீ முன்னால் சென்று கொண்டிருந்தபோது தவறவிட்டுவிட்டார். நான் தெரியாமல் எடுத்து வைத்துக்கொண்டேன். எனவேதான் கால் வலிக்கிறதென்று கூறி ஓடிவந்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு'' என்று ஜெயம் கூறினான். குமரன் ஜெயத்தை அவன் வீட்டுக்குக் கொண்டுசென்றுவிட்டான். பின்னர் நகர காவலரிடம் சென்று மணிக்கூட்டைக்கொடுத்து விபரத்தைக் கூறிவிட்டு வீடு திரும்பினான்.

மறு நாட் காலை அவர்களது பாடசாலையில் ஒரு கூட்டம் கூடியிருந்தது. அதில் அப் பெரியவரைக் கண்ட குமரனும் ஜெயமும் அதிர்ச்சியடைந்து நின்றனர். பெரியவர் எழுந்து தாடியை இழுத்தார். அது கையோடு வந்துவிட்டது. அங்கு பரிசோதகர் நின்றுகொண்டிருந்தார். பின்னர் அவர் ''நேற்று நான் குமரன் ஜெயம் என்பவர்களைச் சந்தித்து வழிகாட்டும்படி கூறினேன். பின்னர் நான் ஒரு மணிக்கூட்டைக் கீழே போட்டேன்'' என்று கூறி அதன்பின் நடந்தவற்றையும் கூறிக் குமரனைப் பாராட்டி அவனது நற்குணத்திற்காக ஒரு தங்கப்பதக்கத்தை அளித்தார். அதில் ''உண்மை உயர்வு தரும்'' என்று பொறிக்கப்பட்டிருந்தது.

# விஞ்ஞான வண்ணங்கள்

— சிவம், கோப்பாய். —

நண்பர்களே! நீங்கள் மந்திர வித்தைகள் பார்த்திருப்பீர்களல்லவா? அப்போது நீங்களும் அதைப்போல் வித்தைகள் செய்ய ஆசைப்பட்டிருப்பீர்கள் அல்லவா? இப்போது உங்களுக்கு நான் சில மந்திர வித்தைகள் சொல்லப்போகிறேன். நான் கூறப்போகும் வித்தைகளெல்லாம் நிறத்தை மாற்றும் வித்தைகள்தான்.

ஒரு கண்ணாடிப் போத்தலொன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அதனுள் மஞ்சள் மாவைப்போட்டு நீர்விட்டுக் கரைத்துக்கொள்ளுங்கள். வேறொரு போத்தலிற் சிறிதளவு சுண்ணாம்பையும் கரைத்தெடுக்கவேண்டும். உங்கள் நண்பர்களை அழைத்து அவர்களின் முன்னே அவையிரண்டையும் கலக்கவேண்டும். முதலில் மஞ்சள் நிறமாயிருந்த கரைசல் இப்போது எப்படி இருக்கிறதென்று பார்த்து நீங்கள் மகிழ உங்கள் நண்பர்கள் திகைப்பார்கள்.

இதோ! இன்னொன்று சொல்கிறேன் கேளுங்கள். முதலில் நீங்கள் தயாரித்த அந்த நிறக் கரைசலுடன் சிறிதளவு எலுமிச்சம்புளியைச் சேர்த்துவிடுங்கள். ஆஹா! அற்புதமான நிறமல்லவா?

இனி வேறொரு வித்தை. ஒரு தட்டிலே கொஞ்சம் சுண்ணாம்பு எடுத்து அதன்மேல் மையைச் சிறு துளிகளாக இரு துளிகள் விடவும். வெண்மை நிறச் சுண்ணாம்பு மாறி வேறு நிறம் தோன்றுகிறதே!

வேறொரு தட்டிற் சிறிதளவு செவ்வரத்தம் பூவை அரைத்தெடுத்து அதனுடன் எலுமிச்சம்புளியைச் சேருங்கள். அங்கே என்ன அழகான நிறம் தோன்றுகிறது பார்த்தீர்களா?

சரிதானே! மந்திரவித்தை பலிக்கிறதா என்று பார்க்க நீங்களும் செய்து பாருங்களேன்!

# பெயர் மாறிய சிலை

ச. க. காளிதாசப் புலவர்

சொல்லை உடைத்துப் புலவன் கவி கண்டான். சிற்பி கல்லை உடைத்துக் கலைவண்ணத்தில் சிலை கண்டான். கலையின் பெருமிதத்தை அசந்தாக் குகை அருமையாக எடுத்துக் காட்டுகின்றது. சிகிரியா சீருடன் எடுத்தியம்புகின்றது. கலையின் சிறப்பேயாம் சிலை. இதற்கு விலைபேசுவோர் கலைகளை அலசி ஆராய ஆதாரமில்லாதவர்கள் என்றே கொள்ளல்வேண்டும்.

'செந்தமிழும் நாப் பழக்கம் சித்திரமும் கைப் பழக்கம்'. ஆனால் முத்தமிழும் ஒருங்கே உருவெடுத்துவிட்டால் எப்படி உள்ளத்தைத் தெவிட்டுமென்று கூற முற்பட்டால் இயலாமல் இருக்குமோ அந்தளவிற்குச் சிலை உலகில் உயர் நிலையாகும். செதுக்கிய சிலையின் கீழ் இதுதான் இருடி. அது தான் அரசன்; முன்னிருப்பது முனிவன் என்று எழுதிவிடும் அளவிற்கு அமைத்துவிட்டால் அது வெறும் கல்தான் என்பதில் எதுவித வேடிக்கைக்கும் இடமில்லை.

உயர்ந்த கருத்துத்தனைக் கண்பட்டதும் உள்ளத்தில் பதியும்படி தொனிக்கும் அளவிற்குக் கருத்து உள்ளதுதான் கலையின் வடிவம். வெளிப்படையாக வெள்ளை உள்ளங்களின் நல்ல தரமான உண்மையைப் புலப்படுத்தும் அளவிற்கு பலம் வாய்ந்ததுதான் சிலை என்றால் அது சிறப்பாகும். புலிச் சிலையைப் பூனையென்று சொல்லும் அளவிற்கு ஒரு சிலர் இருக்கலாம். ஆனால் அதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு ஓர் எழிய சமூகமும் அந்த ஏமாற்றத்திற்கு ஏங்கித் துடிக்கும் சமூகமும் என்றோ ஒருநாள் உண்மையை உணர்ந்தேகொள்ளும்.

ஈழ நாட்டிலே பல புராதீன சிலைகளும் கலைகளும் உள்ளன. இன்றும் கண்ணால் காணக்கூடியது மனத்தால் மகிழத்தக்கது. இதற்கு வீரமா நகர், கதிரமலை, கோணமாமலை, முனீஸ்வரம், திருக்கேதீஸ்வரம், சிகிரியா, பொலநறுவை போன்றவை பொழிலும் எழிலும் மிக்கவையாகும். நதிகளின் ஆரம்பம் எங்கேயாக இருந்தாலும் எல்லாவற்றினதும் சங்கமம் சமுத்திரத்திற்தான் என்ற உயர்ந்த உண்மையை உணர்ந்த மனிதர்கள் உள்ளதை உள்ளபடி உரைத்துவிட உள்ளங் கோணவே மாட்டார்கள்.

இன்று இலங்கையில் இதுதான் இவருடையது என்று வரையறுக்கப்படுகின்ற வரையறை சரியாயினும் பிழையாயினும் தட்டிக் கேட்கத் தலைவர்களுக்குக்கூடப் புரியவில்லை என்பது எமது உள்ளத்தைப் புண்படுத்துகின்றது. இவ்வாறு தட்டிக் கேட்கப்படாத விடயங்களுள் அநுரைக் கோட்டை போன்றவற்றில் இந்தப் பெயர் மாறிய சிலையும் அடங்குகின்றது. மகா பராக்கிரமபாகுவின் சிலை என்று கூறும் அந்தச் சிலையானது மகா மன்னனின் சிலை என்றால் அவன் மணிமுடி எங்கே? ஏறுபோல் பீடு நடை தொனிக்கும் பார்வை எங்கே? வீர உடை வாள் எங்கே? இது உன்னதமான உயர்ச்சி தொனிக்கும் மன்னனின் சிலை என்பதற்கு மனதில் ஒரு மயக்கமும் உள்ளத்தில் ஒரு தயக்கமும் ஏற்படுகின்றது. அவன் மகா பராக்கிரமத்தைப் பங்கமுறுத்துகின்ற அளவிற்கு இந்தச் சிலையை இப் பெயரால் அழைப்பது அநியாயம்!

அந்தச் சிலையை, திறந்த உள்ளத்துடன் இது யாருடைய சிலை? இந்த உருவத்தின் உள்ளக் கருத்து எத்தகையது? என்ற வினாக்களுடன் பார்த்தால் அதன் சாந்தமான பார்வை எங்களைச் சிந்திக்கவைக்கும். அள்ளி முடித்த முடி உள்ளத்தைத் தொடும். கலாச்சாரம் கையில் ஏந்துவது கண்களிற் தண்மையைத் தரும். இதனால் இச் சிலை ஒரு மௌனமானவரின் சிலையென்பது இந்தச் சிலை அரும்பெரும் மகாமௌன முனிவன் மனநிலை மண்டிக்கிடப்பதும் மனத்தில் படிந்துவிடும். இந்தச் சிலை மகா மன்னனுடையதல்ல மகா முனிவனுடையது என்பது எவ்விடத்திலும் எடுத்துரைக்கத்தக்க பகிரங்க உண்மை. இது மகா மன்னன் சமையலுக்கு விறகு காவும் காட்சி என்றாற்கூட எவரும் நம்பவே முடியாது.

இந்த முனிவன்தான் ஈழத்தில் தமிழரின் திடமான திராவிடக் கலாச்சாரத்திற்கு வித்திட்ட தந்தையாய புலத்திக முனிவர். இது இம் முனிவர் பெருமானின் சிலையே என்பதனை நிலைநாட்ட வேண்டுமென்று திராவிடர்களின் பொருட்டு இலங்கைப் பொதுமக்களின் தலைவர்களைக் கூவி அழைக்கின்றேன். என் உளமார அவர்கள் பெருந்தன்மையைக் காணத் துடிக்கின்றேன்.

# பற்கள்

எம். ஐ. எஸ். தாவூத், 38, மெயின் வீதி, மட்டக்களப்பு.

ஒவ்வொரு தாடையிலும் இரண்டு பகுதிகளாக பற்கள் காணப்படுகின்றன. முன் காணப்படும் நான்கு பற்கள் அதாவது, மேல் நான்கு பற்கள், கீழ் நான்கு பற்கள் உளி உருப்போன்று கூரிய நுனிகளை உடையனவாகும். இவை வெட்டுப் பற்கள் எனப்படும். இவை உணவை நறுக்குவதற்குப் பயன்படுகின்றன.

இரு பக்கத்திலுள்ள இரண்டு பற்கள் கூரியனவாக இருக்கும். இவை வேட்டைப் பற்கள் எனப்படும். உணவைக் கடித்து இழுப்பதில் இவை பெரும் பங்கு கொண்டு உள்ளன.

வேட்டைப் பல்லுக்குப் பின் நான்கு பற்கள் ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டாகப் பிரிந்திருப்பதைக் காணலாம். இவை முன் கடைவாய்ப் பற்கள் எனப்படும். உணவை அரைப்பதற்கு இவை பெரிதும் பயன்படுகின்றன.

ஒவ்வொரு பக்கமும் மூன்று பற்களாகக் கடைசி ஆறு பற்களும் அகன்றும், தாவாளிப்பு உடையனவாகவும் இருக்கின்றன. இவை கடைவாய்ப் பற்கள் எனப்படும். உணவை அரைப்பதற்கு இவையும் பயன்படுகின்றன.

மனிதனுடைய பற்களின் எண்ணிக்கை 32. அதன் விபரம்: மேல் தாடையில்:- வெட்டுப் பல் 4, வேட்டைப் பல் 2, முன்கடைவாய்ப் பல் 4, கடைவாய்ப் பல் 6. மொத்தம் 16 பற்கள். கீழ்த் தாடையிலும் முறையே 16 பற்கள். எனவே மனிதனின் பற்கள் 32.

எலி, நாய், சுறு போன்ற விலங்குகளை ஆராய்ந்தால் எலிக்கு, வெட்டுப் பல்லும் கடைவாய்ப் பற்களுமே உண்டு. இவற்றிற்கிடையே நீண்ட இடைவெளியுண்டு. வெட்டுப் பற்கள் நீண்டும், ஒன்றுக்கொன்று நோக்கி வளைந்தும் இருப்பதனால் கீழ்ச் சோதியும், மேற் சோதியும் பொருந்தக் கூடியனவாக இருக்கும். எலி உணவை நறுக்கி உண்ணும்போது வெட்டுப் பற்களும் கடைவாய்ப் பற்களும் பழுதடைவதனால் அவை மீண்டும்மீண்டும் வளர்ந்து

கொண்டே இருக்கும். எலி முதிர்ந்தாலும் அதன் பற்கள் விழுவதில்லை.

மாடு, ஆடு என்பனவற்றில் கீழ்த்தாடையில் உள்ள வெட்டுப் பற்கள் நன்கு வளர்ச்சி அடைந்திருப்பதனால் அவை உணவை நறுக்குவதற்கு உபயோகமுள்ளனவாக இருக்கும். அவை மேல் தாடையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மனிதனைப்போன்று நாய்க்கும் எல்லாப் பற்களும் உண்டு. நாயினுடைய வேட்டைப்பல் அதன் மறு பற்களை விட நீண்டு வளர்ந்திருப்பதனால் நாய் தனதுணவைக் கடித்துண்ண ஏதுவாக இருக்கின்றது.

* *
* *

## மாணவர்களும் விளையாட்டுக்களும்

கு. சிவபாலராஜா, வித்தியானந்தக் கல்லூரி முள்ளியவளை.

அரிதிற் பெற்ற நமது உடம்பை நாம் ஒவ்வொருவரும் பெரிதும் பேணிக் காப்பாற்ற வேண்டும். மாணவர்களாகிய நாம் தினமும் சத்துள்ள உணவைச் சாப்பிட்டு வந்தால் மட்டும் போதாது. தினந்தோறும் நாம் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். உடலுக்குப் பயிற்சி கொடுப்பதாயின் பலவித தேகாப்பியாசங்களைச் செய்துபார்க்கலாம். ஆனல் தேகாப்பியாசத்திலும்பார்க்க இக்காலத்தில் மாணவர்கள் பல புதுவிதமான விளையாட்டுக்களை இலகுவாக விளையாட முடியும். அவை நமது உடலை வளர்க்கப் போதுமானவை.

இக்காலத்தில் மாணவர்கள் மேலைத்தேச விளையாட்டுக்களையே பெரிதும்விரும்பி விளையாடுகிறார்கள். எனினும் எம் நாட்டிலும் சுதேச விளையாட்டுக்கள் இருக்கின்றன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. மகாத்மாகாந்தி அடிகள் ஒருமுறை இலங்கைக்கு விஜயம் செய்தபோது காலி, மகிந்தாக் கல்லூரிப் பரிசளிப்புவிழாவில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவின்போது சுதேச விளையாட்டுக்களையும் நமது மாணவர்களையும் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

மேலைத் தேச விளையாட்டுக்களான புட்போல், கிறிக்கெற் போல் போன்ற விளையாட்டுக்கள் எமது நாட்டிற்கு வர முன்னர், சுதேச விளையாட்டுக்களே இங்கு பெரு வழக்கி லிருந்தன. கிளித்தட்டு மறித்தல், கிட்டியடித்தல், வார் பாய்தல், போர் அடித்தல் போன்ற விளையாட்டுக்களே அந்தக்கால விளையாட்டுக்களாகும். அவற்றை இப்போது கேள்விப்படுபவர்கள் ஏளனம் செய்வார்கள். இப்போது அந்தப் பழைய விளையாட்டுக்கள் எங்கேனும் கிராமப் புறங்களில் ஒரு சில மாணவர்களாலே விளையாடப்படு கின்றன. அவற்றின் சுவை இப்போது கெட்டுவிட்டது. மேலைத்தேச விளையாட்டுக்களில் மாணவர்களுக்கு உள்ள விருப்பமும், பற்றுதலும் சுதேச விளையாட்டுக்களில் இருக்க நியாயமில்லை.

இந்த விளையாட்டுக்களால் மாணவர்களுக்கு உண்டா கக்கூடிய பயன்கள் எவை என்பது இன்று பலருக்குத் தெரி யாமல் இருக்கலாம். மாணவர்கள் பலர் கூடுகின்ற ஒரு பாடசாலையை அவதானித்தால் இந்த உண்மை விளங்கி விடும். பல திறப்பட்ட மாணவர்களை நாம் அங்கு காண லாம். ஒருவர் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பார்; இன் னெருவர் சோம்பேறியாக இருப்பார். இதற்குக் காரணம் என்னவெனில் சுறுசுறுப்பான மாணவர்கள் நாள்தோறும் விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்களாகவே காணப்படுவர். ஆனல் சோம்பேறி மாணவர்கள் விளையாடுவதில் மட்டு மல்ல, கல்வித்துறையிலும் அவர்கள் பின்தங்கியவர்களா கவே காணப்படுவர். எனவே விளையாட்டு ஒருவனது உடல் வளர்ச்சிக்கு மட்டுமல்ல; மூளை விருத்திக்கும் காரணமாகும் என்பதை நாம் அநுபவ வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

மாணவர்களே! நீங்கள் மாலை முழுவதும் நன்ருக விளையாடிவிட்டு இரவில் உங்கள் பாடப் புத்தகங்களை எடுத்துப் படித்துப் பாருங்கள். அப்போதுதான் விளையாட் டின் பயன் நன்கு தெரியவரும். அப்போது உங்களுக்கு ஞாபக சக்தி அதிகரிப்பதோடு படிப்பதற்கு விருப்பமும் ஏற்படுகிறது. சுகாதாரம் படித்த மாணவர்களுக்குத் தெரி யும்' விளையாடினுல் உடலிலுள்ள அழுக்குப் பொருளாகிய வியர்வை வெளியேறுகிறது' என்பது. இன்னும் களைப்

படைந்த நேரத்தில் நமது சுவாசம் ஆழமாக நடைபெறு கிறது. இதுவும் விளையாட்டின் பயனேதான். விஞ்ஞான ரீதியில் விளையாட்டின் பயன்களை ஆராய்ந்தால் இன்னும் எத்தனையோவற்றைக் கூறலாம். ஆனால் அவை இங்கு தேவையில்லை. பாடசாலைகளில் வருடந்தோறும் விளையாட் டுப் போட்டிகளை நடத்துகின்றதன் நோக்கம் யாது? மாண வர்கள் கல்வியில் மட்டும் முன்னேறினாற் போதாது. விளை யாட்டுத் துறையிலும் முன்னேறவேண்டும். இந்த நோக்கத் துடன் மாணவர்களை விளையாட்டுத்துறையில் ஆர்வமுறச் செய்வதற்காகவும் இந்த விளையாட்டுப் போட்டிகளைக் கட்டாயம் நடத்துகின்றார்கள்.

இன்றைய மாணவர்கள் விளையாட்டுத்துறையிற் காட்டி வரும் அக்கறை அவ்வளவு போற்றத்தக்கதாக இல்லை. அதிலும் கிராமப் புறத்து மாணவர்கள் விளையாட்டினைத் தேவையில்லாத வொன்றாகவே கருதுகிறார்கள். அவர்கள் தமது வாழ் நாளின் பெரும்பகுதியை உழைப்புக்காகவே கழிக்கிறார்கள். இதனால் அவர்களது உடம்பு போதியளவு பயிற்சியைப் பெறுகிறது. எனவே அவர்களுக்கு உடற்பயிற்சி கள் எதுவும்வேண்டுவது அவசியமில்லை. ஆனால் பாடசாலைக் குச் செல்லும் எந்த மாணவனும் மாலை முழுவதும் விளை யாடுதல் வேண்டும். காலை முதல் மாலை வரை வகுப்பறை களில் உட்கார்ந்து படித்த மாணவர்கள் பிற்பகலில் பாட சாலையைவிட்டு வெளியேறினால் அவர்களது உடலுக்குத் தேவைப்படுவது உடற்பயிற்சியே. சுமார் ஒரு மணி நேர மாவது ஒவ்வொரு மாணவனும் விளையாடுதல் வேண்டும். தினமும் படித்தல், தொடர்ந்து ஒரே வேலையையே செய்தல் ஆகியன மாணவர்களுக்குக் களைப்பினையே உண்டாக்கும். எனவே இடைநேரத்தில் மாணவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபட்டால் அவர்களுக்கு மனத்திருப்தி ஏற்படுமல்லவா?

எமது பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் ஒரு குறைபாடு நிலவுவதைக் காணலாம். அதாவது பெரும் பாலான மாணவர்கள் அங்கு நடக்கும் விளையாட்டு நிகழ்ச்சி கள் எதிலும் பங்குபற்றாது ஒதுங்கிவிடுகிறார்கள். கட்டா யப்படுத்தியே அத்தகைய மாணவர்களை விளையாட்டுத் துறையில் பங்குகொள்ளச் செய்யவேண்டியிருக்கிறது. சிலர்

விளையாட்டுக்களிற் பங்குபற்றுதல் ஏதோ பெரிய விடயம் என நினைக்கின்றனர். ஆனால் அது தவறு! இன்னும் சிலர் விளையாட்டிற் பங்குபற்றும் மாணவர்களைக் கேலி பண்ணு கிறார்கள். அதுவும் தவறு! அத்தகைய மாணவர்கள் பெரும் பாலும் சோம்பேறிகளாகவே இருப்பார்கள். விளையாட்டு வீரனாக ஒருவன் திகழ்ந்தால் அவனுக்குக் கிடைக்கக்கூடிய சான்றிதழ்களைப் பற்றி அநேக மாணவர்கள் அறியமாட் டார்கள். எனவே, மாணவர்களாகிய எல்லோரும் கட் டாயமாக விளையாட்டுத்துறையில் ஈடுபட்டு, விளையாட்டு வீரராகத் திகழவேண்டியது அவரவர் கடனாகும்!

## ஏழையின் கனவு!

—: இ. சிவயோகநாயகி, அ. த. க. பாடசாலை, கிளிவெட்டி. :—

மதிய நேரம்! தாங்கமுடியாத பசி. நடக்க முடியாத நிலையில் அந்த ஏழை பசியின் வேதனையால் ஒரு பணக்கா ரர் வீட்டுக்குப் போனான். அங்கே ஒரு பெண்மணி நாய் ஒன்றுக்கு பிஸ்கற், ரொட்டி முதலிய உணவுப் பொருட்க ளைப் போட்டுக்கொண்டிருந்தாள். அப்போது ஏழைக்குப் பசி தாங்க முடியாமல் ''பழஞ்சோறு இருந்தாற் கொடுங் கள் அம்மா'' என்று கேட்டான்.

'உணவா வேண்டும்?' என்று கோபித்து ஏழையைக் கடிந்து துரத்தினாள். அதோடு அவள் நாயைக்கூட ஏவி விட்டாள். பிச்சைக்காரன் ''நீங்கள் தரும் பிச்சை வேண் டாம்; நாயைப் பிடியுங்கள்'' என்று சொல்லிக்கொண்டு சென்றவன் களைப்பு மிகுதியினால் ஒரு மண்டபத்தின் திண்ணை யில் வெயிலின் கொடுமை தாங்கமுடியாமற் கண்ணயர்ந்தான்.

இராசேந்திரன் ''நடேந்திரன் நீதானா?'' என்று கேட் டவாறே ''உனக்கு சுவீப் விழுந்திருக்கு'' என்று ஒரு கடி தத்தைக் கொடுத்தான். அதைப் பிரித்துப் பார்த்த நடேந் திரன் அதில் ஒரு லட்சம் ரூபா விழுந்திருப்பதைக் கண் டான். உடனே அப் பணத்தைப் பெற்றுக்கொண்டு மின் சார சிகிச்சையின் மூலம் தனது காலைத் திருத்திக் கொண் டான். இதை அறிந்த மக்கள் பெண் கொடுக்க முன்வந்த

னர். அழகும்-குணமும்-பண்பும் நிறைந்த பெண்ணை விவாகம் செய்துகொண்டான்.

ஏழைகள் எல்லோரும் நடேந்திரனுடைய வீட்டைத் தங்கள் வீடுபோற் பாவித்தனர். பிச்சைக்காரரை அழைத்து ஓர் மகாநாடு ஒன்றைக் கூடினன்.

''சகோதர சகோதரிகளே! எனது அன்பார்ந்த வணக்கம். நாம் எல்லோரும் மற்றவர்களைப்போல் வாழவேண்டும். மேலைத் தேசங்களில் எங்களைப்போல் ஏழைகளுக்கு அரசாங்கம் உணவு-உடை கொடுத்து உதவி புரிகின்றது. நமது நாடு ஏன் அப்படி உதவி புரிவதில்லை? பெரியோர்களே! ஆதரவற்ற காலங்களில் நாங்கள் பசிக் கொடுமை தாங்க முடியாமல் வருந்துகிறோம். அந்த நிலையிற் செல்வந்தர்கள் நம்மை மிருகங்களைப் போலத்தானும் மதிப்பதில்லை. எங்கள் பாத்திரத்தில் உமி அல்லது கல் முதலியவற்றை இடுகின்றனர். பெரியோர்களே! நான் குறை கூறவில்லை. நாம் அநுபவிக்கும் செல்வம் இறைவன் தந்த பொருள் என்று எண்ணி எல்லோருக்கும் மனம்மகிழக் கொடுங்கள் எல்லோரும் இன்பமாய் வாழவேண்டும். ''செல்வமும் வறுமையும் மாறிமாறி வரும்; குடை நிழலில் இருந்து குஞ்சரமூர்ந்தோர் நடை மெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்; செல்வம் பெற்றதன் பயன் இல்லாதவர்க்கு உதவி செய்வதே'' நடேந்திரன் தொடர்ந்து பேசினன்.

''செல்வந்தர் சிலர் செல்வக் கடலிலே மூழ்கின்றனர். பலர் வறுமையினுற் துடிதுடிக்கின்றனர். இப்படிப் படைத்த இறைவன் கெட்டு ஒழிந்துபோகக் கடவான். நண்பர்களே! நமது அரசாங்கத்திற்கு முறையிடுவோம். எங்கள் சமூகத்தின் சார்பாகப் பாராளுமன்றத்தில் ஒரு பிரதிநிதியை நியமிக்கவேண்டுமென்று பிரதம மந்திரியை வற்புறுத்துவோம். நாம் எல்லோரும் இந் நாட்டு மன்னர்கள்'' என்று முழங்கிக் கைகளைத்தட்டி ஜே! ஜே! என்று உரக்கக்கூவினன்.

அப்போது மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தவர்கள் சிரித்துச் சத்தமிட்டு எழுப்பியபோதுதான் அந்தப் பிச்சைக்காரன் மண்டப விருந்தையில் வெயிலில் கிடப்பதையும் தான் கண்டது கனவு என்பதையும் உணர்ந்தான்.

# இஸ்லாமிய வாழ்க்கைக்கு வழி கோலும் அல் குர் ஆன்

கே. எம். பாறூக், மெயின் வீதி, பதியதளாவ.

பிறப் பொன்று உண்டெனில் இறப் பொன்று இருப்பது நிச்சயம். இந்தப் பிறப்புக்கும் இறப்புக்கு மிடையில் முஸ்லிமாகிய நாம் எத்தகைய வாழ்க்கை முறைகளை அமைத்து தீயவைகள் எது நல்லவைகள் எது என்பதை உணர்ந்து நடப்பது மறுக்க முடியாக் கடமையாகும். நிச்சயமாக நாம் இன்று போலி உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அப்படியானால் உண்மை உலகை அடைய வேண்டும். இறைவனின் அருளைப் பெறவேண்டுமானால் இறைவனின் கட்டளைப்படி நடந்து திருமறை எவ்வாறு வாழ்க்கை முறைகளைப் பற்றிக் கூறிஇருக்கிறதென்று ஆராய்ந்து, பூர்த்திசெய்து மூமீன் என்ற பெயரைப் பெறவேண்டும்.

இஸ்லாமிய வாழ்க்கை முறைகளை நல்ல முறையில் எடுத்துரைத்து விளக்கியிருப்பதுதான் திருமறை. அதன் வசனங்கள் தேனமிர்தமாகப் பதிந்துள்ளன. ஒரு முஸ்லிமானவன் திருமறையின் போதனைப்படி அவன் வாழ்க்கை முறைகளை அமைத்தானாகில் மறுமை நாளில் அவனுக்கு நல்லதோர் பூரண வாழ்க்கை ஒன்றை வழங்க இறைவன் எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றான்.

இஸ்லாம் எக் கோணத்திலிருந்து பார்த்தாலும் மாசு மறுவற்ற ஒரு பரிபூரண வாழ்க்கைத் திட்டம் என்பது அறிவுடைய அனைவருக்கும் புலனாகும். அதுவே வாழ்க்கையின் சகல துறைகளுக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகும். இஸ்லா மெனும் தூய சொல்லை உள்ளத்தால் நினைத்தால் மட்டும் போதுமா? அதனைச் சரியான முறையில் செயற்படுத்தினாற்றான் திருமறையின் கூற்றுக்குச் சரிப்பட்டு வரும். நாம் இவ்வுலகில் நல்ல ஒழுக்க முறையில் நடந்து அதன் மூலம் மறுமையிலும் நல்அடியானாகத் திகழ முடியும். நாகரீகப் பகட்டுக்கும் அனாச்சாரத்திற்கும் உள்ளத்தைப் பறிகொடுத்துப் பாவத்தைச் சுமந்துகொள்கிறோம். இது தானா திருமறை கூறிய வாழ்க்கை முறை. கற்பனை செய்யக்கூட முடியாத அனாச்சார வாழ்க்கையை மேற்கொண்டு

வாழ்வது நம் இனத்திற்கே கேவலம்! கேவலம்! இஸ்லாமியச் சகோதரர்களே இறைவனின் உண்மை விசுவாசிகளே இஸ்லாமிய வாழ்க்கை முறைக்குத் திருமறை போதித்தது என்ன?

அனுச்சாரம், அட்டூழியம் இவைகளை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. இவைகளிலிருந்து விலகித் திருமறையின்படி இறைவனின் ஏவலை எடுத்து விலக்கலைத் தவிர்த்து நடக்கவேண்டும். முஸ்லிமாகிய நாம் அனைவரும் திருமறை கூறும் முறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். இஸ்லாமியப் பண்பாடு, கலாச்சாரம் என்று வாய்க்கு வந்தபடி பேசுகிறோம். ஆனால், எமது நடைமுறைகள் அத்தனையும் நேர்மாறாகவே இருக்கின்றன. நாகரீகத்தின் பேரால் அனுச்சாரங்களை மேற்கொண்டு ஒழுகிவரும் இஸ்லாமியப் பண்பாட்டிற்கு மூற்றுப்புள்ளி வைத்தாகிவிடுகிறது.

நிச்சயமாக இந்தப் பூமி இறைவனுக்கே உரியது. (திருக்குர்ஆன்) இப் பூமி நமக்குச் சொந்தமில்லை. இப் புவியில் வாழுங் காலத்திற்குள் சாந்தியையும் சமாதானத்தையும் நிலைநாட்டி இறைவன் சந்நிதானம் போய்ச் சேர வேண்டும். எனவே இறைவனின் திருமறையின்படி இஸ்லாமிய வாழ்க்கை முறைகளைச் சரிவர அமைத்து நல் அடியார்களாக நாயகன் சமூகம் போய்ச் சேருவோமாக!

''பொய்யனுக்கும், நன்றி மறந்தோனுக்கும் மெய்யாகவே இறைவன் நல் வழி காட்டுவதில்லை'' —திருமறை


## !எதிர்பாருங்கள்!

**மாணவர்மன்ற அங்கத்தவர்களுக்கு மாத்திரம்**

**— கட்டுரைப் போட்டி —**

இன்றே வெற்றிமணி மாணவர் மன்றத்தில்

**அங்கத்தவராகச் சேருங்கள்.**

*விண்ணப்பப் பத்திரங்கள் தேவையானோர் எழுதுக.*

**வெற்றிமணி — முன்னியவளை** — இலங்கை.

# கவிதை அரங்கம்



## எப்பதான் மாறுவர்?

+ கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை +

நல்லவர் யாருக்கும் அஞ்சிடார் — இந்த
ஞாலத்தில் யாரையும் கெஞ்சிடார்
பொல்லாத தீமையைக் கொஞ்சிடார் — எந்தப்
போதிலும் உள்ளமே துஞ்சிடார்.

வஞ்சகர் தீமையே நாடுவர் — நல்லோர்
வாழ்வுக்குக் குண்டையே போடுவர்
தஞ்ச மடைந்தாலும் சாடுவர் — என்றும்
தங்கள் புகழையே பாடுவர்.

சட்டங்கள் திட்டங்கள் தீட்டுவர் — பல
சாத்திர மேற்கோள்கள் காட்டுவர்
இட்டம் போலப்பழி சூட்டுவர் — தங்கள்
எண்ணத்தை நிலை நாட்டுவர்.

தீமையை எப்போதும் கொன்றிடார் — நல்ல
திண்ணிய பாதையில் நின்றிடார்
ஆமையைப் போற்புலன் வென்றிடார் — இந்த
அயோக்கியர் நல்வழி சென்றிடார்.

நீதி நெறி பல கூறுவர் — அடுத்த
நிமிடததிலே அதை மீறுவர்
சாதி வெறிகொண்டு சீறுவர் — இந்தச்
சண்டாளர் எப்பதான் மாறுவர்.

***

# வெண்ணிலாவே!

த. சரஸ்வதிதேவி, கணுக்கேணி-கிழக்கு, முள்ளியவளை.

வெண்மை ஒளி வீசிடுவாய்
வெண்ணிலாவே
தண்மை ஒளியில் இன்புறுவேன்
வெண்ணிலாவே!

இருளகற்றி ஒளியை ஈவாய்
வெண்ணிலாவே!
இரவில் மலரும் மலர்துதிக்கும்
வெண்ணிலாவே!

விண்மீன்கள் மத்தியிலே
வெண்ணிலாவே!
கண் குளிர வந்திடுவாய்
வெண்ணிலாவே!

விண்ணைத் தாண்டி உன்னில் வந்து
வெண்ணிலாவே!
மண்ணைக் கொண்டு மனிதன் மீண்டான்
வெண்ணிலாவே!

!-!-!

# வெற்றிமணி ஒலிக்கின்றது!

-: சி. த. சிறீலங்கநாயகம் :-

வெற்றிமணி ஒலிக்கிறது சிறுவர்தம்
உள்ளத்திலே
புத்துணர்வு மிளிர்கிறது சிறுவர்களின்
எழுத்தினிலே
புதுமைமிகு வெற்றிமணியின் புகழெங்கும்
ஓங்குகவே
மணியாக வாழ்த்துகிறேன் மணியெங்கும்
ஒலித்திடவே

# ஆடிக் கூழ்!

— நவாலியூர்க் கவிராயர் —

எங்கள் வீட்டின் அயலுள்ள
ஒழுங்கை ஒன்றினிலே
தங்கள் இனிய குரலெழுப்பிச்
சிறுவர் வந்தனர்.

பாடி ஆடி அவர்களங்கு
பாய்ந்து நிற்கையில்
நாடி வந்து அவ்விடத்தே
நானும் நிற்கையில்

தங்கத் தாத்தா பாடியதோர்
பாட்டைப் பாடினர்
எங்கும் இன்பக் கிளுகிளுப்பை
ஏற்ப டுத்தினர்

ஆடிக் கூழைப் பற்றியவர்
அன்று பாடினர்
கூடிக் கூழைக் குடித்திடுவோம்
என்று கூவினர்

ஆடிப் பிறப்பு நாளுக்காகப்
பாடசாலைகள்
மூடிச் சிறுவர் கூழ்குடித்து
அன்று மகிழ்ந்தனர்

ஆடிப் பாடும் இந்தச் சிறுவர்
ஆடிக் கூழினை
தேடினாலும் இந்தக் காலம்
சிறிதுங் காண்பரோ?

# வெற்றிமணி!

— செல்வி நோ. இராசம்மா —

வெற்றிமணி ஓசை எங்கும் ஒலிக்கவேண்டும்
விளைகின்ற இளம் நெஞ்சம் கேட்கவேண்டும்
வெற்றிமணி திங்களிதழ் என்னுமோசை
விரைந்தோடி வாரஇதழ் ஆகவேண்டும்!

# வெற்றிமணி மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்தில் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். பாடசாலையிற் படிப்பவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றிச் சேரலாம். விண்ணப்பப் பத்திரம் தேவையானோர் எழுதுக.

**வெற்றிமணி, முள்ளியவளை, இலங்கை.**

## அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

அன்புள்ள மணி மாமாவுக்கு,

வெற்றிமணி மாணவர் மன்றத்தில் என்னையும் ஒரு அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளவும். 50 சதம் அனுப்புகின்றேன்.

செல்வன் / செல்வி ..........................................

பாடசாலை முகவரி ..........................................

வீட்டு முகவரி ..........................................

பிறந்த திகதி .................... வயது .................... வகுப்பு

கடிதத்தொடர்பு ஆண், பெண் இருபாலாரும்.

.................................................... ....................................

ஆசிரியர் / பெற்றோர் கையொப்பம் கையொப்பம்

# பேனு நண்பர் சங்கம்

உலகத்தின் பலபாகங்களிலு முள்ளவர்களைக் கடிதமூலம் அறிந்துகொள்ளவும், ஒருவர் கஷ்டத்தை மற்றவரிடம் கூறி ஆறுதல் கொள்ளவும், நல்லவர் உறவைப் பெறவும், தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இச்சங்கம் உதவியாக இருக்கும்.

1. சங்கத்தில் சேர விரும்புகிறவர்கள் 50 சதம் அனுப்பவேண்டும்
2. பெயர், முகவரி, வயது இவற்றைவிட அறிந்த பாஷைகள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், மற்றும் திறமைகள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் எழுதலாமா என்ற விபரங்களை 25 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்பவும்.
3. தோழர் தோழர்களுக்கும், தோழியர் தோழியர்களுக்குமே எழுதலாம். ஆனல் இருபாலாரும் எழுதலாம் எனக் குறிப்பிடின் எவரும் எழுதலாம்.
4. வயதுக் கட்டுப்பாடின்றி உலகத்தின் எப்பகுதியிலுள்ளவரும் சேரலாம்.
5. தங்கள் புகைப்படங்களை இப்பகுதியில் வெளியிட விரும்புகிறவர்கள் புளக் (Block) அனுப்பவேண்டும். புளக் இல்லாவிடில் புளக்செய்ய புகைப்படத்துடன் ரூ. 7-50 அனுப்பவேண்டும்.

இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப்பதிவுசெய்யப்பட்டது Q.B.1338


**QUALIFIED OPTICIANS**

*Visit*

# MOHANLAL. C. VASA

No. 207, Second Cross Street,

**COLOMBO 11**

*Telegrams:* **VASOPTICO** *Telephone:* **2931**

---

**கண்களுக்குத் தேவையான**

**சகலவிதமான கண்ணாடிகளுக்கும்**

**எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**

## மோகன்லால் C. வாசா

இல. 207, இரண்டாங்குறுக்குத் தெரு,

**கொழும்பு 11.**

தொலைபேசி: 2931


இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொ. இராசரத்தினம் அவர்களால் முள்ளியவளை தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-8-69 வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.